**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 170/2022**

**வாதி தரப்பு சாட்சி-2 பெருமாள் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 26.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) தாவா சொத்து ஆதியில் பூமிதான போர்டுக்கு சொந்தமானது என்றால் சரிதான். பூமிதான போர்டு தாவா சொத்தை சண்முகத்தின் தகப்பனார் பிச்சைக்காரனுக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பிச்சைக்காரன் இறந்தபின்னிட்டு அவரது மகன்கள் சண்முகம், ஆண்டியப்பன், பெருமாள் வாரிசுகள் மற்றும் சுப்பிரமணியன் வாரிசுகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். சுமார் 10 வருடத்திற்கு முன்பே பிச்சைக்காரனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் சரிதான். பாகப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டு அதில் கண்டுள்ளபடி அவரவர் பாகத்தை அவரவர் அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரிதான். பாகப்பத்திரத்திற்கு பின்னிட்டு கிணற்றை பாதி பாதி பாகமாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

2)சண்முகத்திற்கு பிரிந்த பாகத்தை அவரும், ஆண்டியப்பன் பாகத்தை ஆண்டியப்பன் தனியாகவும் அனுபவம் செய்கிறார்கள் என்றால் சரிதான். 2013 பாகப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி கிணற்றில் உள்ள மோட்டாரிலும் பாதி பாகம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தற்போது வரை அவ்வாறு தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கு நிலங்கள் ராசாப்பட்டியில் உள்ளது என்றும், தாவா சொத்தின் அருகில் எனக்கு நிலங்கள் இல்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொன்னது என்றால் சண்முகம் சொன்னார். அதில் நான் கையெழுத்து போட்டேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் தெரியாது என்றால் சரிதான். சண்முகம் அழைத்ததால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். ஆண்டியப்பன் தற்போது வரை அவரது பாகத்தையும், கிணற்றில் பாதி பாகத்தையும் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

**Kulithalai.**